# தேவனும் சாத்தானும் ஒரே நிகழ்ச்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களா?

## (2 சாமுவேல் 24; 1 நாளாகமம் 21)

*2 சாமுவேல் 24:1 வசனம், "கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது. இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டான்'' என்று கூறுகிறது. தாவீது இலக்கம் பார்க்கும்படி ஏவப்பட்டதற்கு முன்பு "கர்த்தருடைய கோபம்" மூண்டிருந்தது.* NIV *பதிப்பு, "கர்த்தருடைய கோபம் மீண்டும் இஸ்ரவேலின் மீது பற்றி எரிந்தது, அவர் தாவீதை அவர்களுக்கு விரோதமாக ஏவினார்" என்று கூறுகிறது* (KJV, NKJV, RSV, *முதலியவற்றையும் காணவும்). 1 நாளாகமம் 21:1ன் வெளிச்சத்தில், "அவர்" என்பது இவ்விடத்தில் சாத்தானைக் குறிப்பிடக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது (இது எனது* KJV *வேதாகமங்களில் ஒன்றே ஒன்றில் மாத்திரம் மையக் குறிப்புகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது), ஆனால் இது சாத்தியமாயிருக்க முடியாது.* NKJV*யில் ''அவர்''* [He] *என்பது பெரிய எழுத்துக்களில் உள்ளது, இது, மக்கள் தொகை கணக்கெடுக்கும்படி யெகோவாவே தாவீதை ஏவினார் என்பதைக் கேள்விக்கிடமின்றி விட்டு வைக்கின்றது.*

*இதற்கு மறுபுறத்தில், 1 நாளாகமம் 21:1, "சாத்தான்* [*நேரடியான அர்த்தத்தில் எதிராளியானவன்*] *இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது'' என்று கூறுகின்றது. ஒரு வசனப்பகுதி, தாவீது அதைச் செய்வதற்குத் தேவன் காரணமானார் என்று கூறுகிறது; இன்னொன்று, தாவீது அதைச் செய்வதற்குச் சாத்தான் காரணமானான் என்று கூறுகிறது. இவ்விரு வசனப் பகுதிகளும் ஒப்புரவாக்கப்பட முடியுமா?*

*தாராளமய கல்வியாளர்கள், 1 நாளாகமம் எழுதப்பட்ட காலத்தில் இறையியல் கொள்கை வளர்நிலையில் இருந்தது எனவே ஜனத்தொகை கணக்கிடுதல் பற்றிய வரலாறு பிரதி எடுக்கப்பட்டபோது, "கர்த்தர்" என்பது ''சாத்தான்'' என்று மாற்றப்பட்டது என்பதாகக் கூறுகின்றார்கள். வாய்மொழி ஏவுதலில் நம்பிக்கை உள்ளவர்கள் இவ்விதமாக இயல்பு நிலைக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள இயலாது.*

இதற்குரிய விளக்கமானது எளியதாகவும் அதே வேளையில் சிக்கலான தாகவும் உள்ளது. மக்கள் தொகை கணக்கிடும்படி தாவீது மேற்கொண்ட முடிவில் தேவன், சாத்தான் ஆகிய இருவரும் ஈடுபட்டார்கள். ஆவிக்குரிய உலகத்தின் செயல்பாடுகளுக்குள் உட்கண்ணோட்டம் அளிக்க யோபுவின் புத்தகத்தை பயன்படுத்தி, நாம் "சாத்தான் அதைச் செய்தான், தேவன் அதை அனுமதித்தார்" என்று கூறலாம். (யாக். 1:13 தேவன் "ஒருவனையும் ... [நேரடியாக] சோதிக்கிறவருமல்ல" என்று உறுதிப்படக் கூறுகின்றது என்பதை மனதில் வைக்கவும்.) யோபு புத்தகத்தின் தொடக்க அதிகாரங் களை நமது அடையாளப் படுத்துதலின் கருத்தாகப் பயன்படுத்தத் தொடருகையில், நாம் "சாத்தான் தாவீதையும் இஸ்ரவேலையும் அழிக்கும் படி அதைச் செய்திருக்கையில், தேவன் தாவீதுக்கும் இஸ்ரவேலுக்கும் உதவும்படி - அவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு மதிப்புமிக்க பாடங்களைப் போதிப்பதற்காக (அதாவது, அவர்கள் ஆவிக்குரிய வகையில் வளர உதவுவதற்காக) - அதை அனுமதித்தார்" என்று கூறுவோம். மக்களைக் கணக்கிடும்படி தாவீதைத் தேவன் தூண்டினார் என்று கூறுவதில், 2 சாமுவேல் புத்தகத்தின் எழுத்தாளர், தேவன் தமது மக்களின் வாழ்வில் *செயல்படுகின்றார்* என்பதை ஒப்புக்கொண்டிருந்தார்.

வேதாகமத்திலுள்ள பல உதாரணங்கள், தேவனும் சாத்தானும் ஒரே நிகழ்ச்சியில் செயல்படுவதைக் காண்பிக்கின்றன. என் வார்த்தைகளை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்: அவர்கள் *ஒத்துழைப்பதில்லை;* மாறாக, அவர்கள் *ஒரே நிகழ்வில் செயல்படுகின்றார்கள்.* அந்த நிகழ்வில் அவர்கள் செயல்படுவதற்கான நோக்கங்கள் மிகவும் மாறுபட்டவைகளாய் இருக்கின்றன. இயேசு சோதிக்கப்பட்டது என்பது இவ்விருவரும் ஒரே நிகழ்ச்சியில் செயல்பட்டதற்கு ஒரு உதாரணமாக உள்ளது. மத்தேயு 4:1, "அப்பொழுது இயேசு *பிசாசினால்* சோதிக்கப்படுவதற்கு *ஆவியானவரா*லே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்." சிலுவை மிகச் சிறந்த உதாரணமாக உள்ளது: சாத்தான் இயேசுவை அழிப்பதற்கு மதத் தலைவர்கள் மூலமாகச் செயல்பட்டான்; இயேசு நமது பாவங்களுக்காக மரிக்க வேண்டும் என்பதால் தேவன் இதை அனுமதித்தார். பவுலின் மாம்சத்தில் இருந்த முள் என்பது நம் யாவரிடத்திலும் பேசுகின்ற ஒரு உதாரணமாக உள்ளது. பவுல் தமது உபத்திரவத்தை "*சாத்தானின் தூதன்*" (2 கொரி. 12:7) என்று அழைக்கின்றார், ஆனால் பின்பு அவர், தாம் தமது சுயபலத்தின் மீது சார்ந்திருப்பதற்குப் பதிலாக தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காகத் தேவன் அதை (பவுலின் உபத்திரவத்தை) பயன்படுத்தினார் என்று கூறுகின்றார் (2 கொரி. 12:9, 10அ).

நமது வாழ்வில் நடக்கின்ற எல்லாவற்றையும் சாத்தான் நம்மை அழிப்பதற்குப் பயன்படுத்தும் அதே வேளையில், அவற்றைத் தேவன், மிகச் சிறந்த மக்களாக நம்மை உருவாக்கப் பயன்படுத்துகின்றார் என்று நாம் தைரியமாகச் சொல்ல முடியும். நம் வாழ்வில் எல்லாம் நல்லமுறையில் நடக்கின்றது என்றால், தேவன் நம்மை ஆசீர்வதிக்கின்றார் மற்றும் அவர் நம்மை மதிக்கின்றவர்களாக்க முயற்சி செய்கின்றார், ஆனால் சாத்தான், நமது வெற்றியைக் கொண்டு நம்மை, மேட்டிமையுள்ளவர்களாகவும்

தேவனைக் கொஞ்சமே சார்ந்திருப்பவர்களாகவும் ஆக்க முயற்சி செய்கின்றான். பிரச்சனைகள் எழுந்தால், அவற்றைத் தேவன் நம்மைப் பெலப்படுத்தவும் நமக்கு நீடிய பொறுமையைக் கொடுக்கவும் பயன்படுத்த முடியும். ஆயினும் சாத்தான், நாம் தேவனால் கைவிடப்பட்டு விட்டதாகவும் நாமும் அவரை விட்டுவிட வேண்டும் என்றும் நமக்குக் கூறுவான்.

ஒரே சூழ்நிலையில் தேவனும் சாத்தானும் எவ்வாறு செயல்பட முடியும் மற்றும் செயல்படுகின்றார்கள் என்பது பற்றிய புரிந்து கொள்ளுதலானது 2 சாமுவேல் 24ஐயும் 1 நாளாகமம் 21ஐயும் ஒப்புரவாக்கு தலுக்கு மட்டும் இன்றி, நமது வாழ்வில் நடைபெறும் ‘‘அற்பமான’’ விஷயங்களுக்கு அர்த்தச் செறிவு கொடுக்கவும் முக்கியமானதாக உள்ளது.